**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.124/2025**

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சந்திரசேகரன் | Father's Name | : | சோமசுந்தரம் |
| Village | : | கொரடாச்சேரி | Taluk | : | கொரடாச்சேரி |
| Calling | : | | Age | : | 57 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 03rd day of February 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது கொரடாச்சேரி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.02.2025 அன்று திருவாரூர் நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது காலை 9.00 மணியளவில் உதவின ஆய்வாளர் திருநாவுக்கரசுடன் ரோந்து பணியிலிருந்தபோது திருவாரூர் தெற்கு வீதியில் உள்ள அப்பல்லோ பார்மஸி எதிரே ஒரு நபர் கையில் வீச்சருவாளை வைத்துக் கொண்டு பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக சத்தம் போட்டுக்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.03 16:01:29 +0530

கொண்டிருந்தார் என வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் நானும், உதவி ஆய்வாளர் திருநாவுக்கரசு, தலைமை காவலர் ஞானசேகரன் ஆகியோர் சென்று பார்த்தபோது அவர் தான் ஒரு பெரிய ரவுடி என சொல்லிக்கொண்டு அருவாளை சுழற்றிக் கொண்டிருந்தார். ஓட முயன்றவரை நாங்கள் பிடித்தோம். தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிதான் அந்த நபர். அவரை விசாரித்தபோது அவரது பெயர் மணிகண்டன் என தெரிவித்தார். உதவி ஆய்வாளர் அவரை அங்கேயே கைது செய்து அப்பல்லோ பார்மஸியில் வேலை பார்க்கும் சாட்சிகள் முன்னிலையில் எதிரி வைத்திருந்த அருவாளை கைப்பற்றி எதிரி மற்றும் தடயத்துடன் காவல் நிலையம் வந்து முதல் தகவலறிக்கை பதிவு செய்தார். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

பொதுமக்கள் யாரும் இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரி. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் உள்ள அப்பல்லோ பார்மஸியில் CCTV Camera பொறுத்தப்பட்டுள்ளது என்றால் சரி. எதிரி மீது ஏற்கனவே திருவாரூர் நகர காவல் நிலையத்தில் கொலை வழக்கு இருப்பதாலும் எதிரியை குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்ய வேண்டுமென்றால்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.03 16:01:37 +0530

மேலும் அவர் மீது வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அவர் மீது வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.03 16:01:43 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.